අධ්‍යක්ෂ ජනරාල්
பணிப்பாளர் நாயகம்
Director General
Tel. 2484614
Fax. 2436337

කාර්යාලය
செயலகம்
Office
Tel. 2484637
Fax. 2431458

Website : www.treasury.gov.lk

මහලේකම් කාර්යාලය (1වෙනි මහල)
செயலகம் (1ம் மாடி)
The Secretariat (1st Floor)

කොළඹ-01
கொழும்பு-01
Colombo-01

E-mail : pubfin@pfd.treasury.gov.lk

රාජ්‍ය මුදල් දෙපාර්තමේන්තුව

මහා භාණ්ඩාගාරය

அரச நிதித் திணைக்களம்

**DEPARTMENT OF PUBLIC FINANCE**

**General Treasury**

මගේ අංකය / எனது இல / My No: PF/PD/02/Cir 2010(i)

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 30.04.2010

அரச நிதிச் சுற்றறிக்கை இல. 442

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள்
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள்,
அதிகார சபைகள் மற்றும்
அரசாங்க உடமைக் கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்.

<u>உள்ளூர் நிதி ஏற்பாடு மூலமான ஒப்பந்தப் பணிகளில் பங்கேற்கும்
உள்ளூர் கேள்வி மனுதாரர்களுக்கு முன்னுரிமை வழங்குதல்</u>

"மஹிந்த சிந்தனை இதிரிதெக்ம" நிகழ்ச்சித்திட்டத்தின் வழிகாட்டலுக்கு அமைவாக உள்ளூர் நிர்மாணக் கைத்தொழிலினையும் அதே போன்று அதனோடு இணைந்த பிற கைத்தொழில்களையும் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் முழுமையான பயனினைப் பெற்றுக் கொள்வதற்கு அக்கைத்தொழிற்துறையினை மேம்படுத்துவதற்காக அரசாங்க ஒப்பந்த சேவைகளை வழங்கும் போது முன்னுரிமை வழங்குவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. நிர்மாணக் கைத்தொழிலின் தேசிய முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டும் உள்ளூர் பெறுமதி உருவாக்கத்தில் உச்சப் பயனைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும் வெளிநாட்டுக் கேள்வி மனுதாரர்களுடன் போட்டியிடும் போது உள்ளூர் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கக்கூடிய உள்ளூர் முன்னுரிமையினை பத்து (10%) சதவீதத்திலிருந்து பதினைந்து (15%) சதவீதமாக அதிகரிப்பதற்கு அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி அனைத்துக் கேள்விப்பத்திரங்களும் இந்த அடிப்படையினைக் கொண்டு மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

02. இதன் பிரகாரம் 2006 அரசாங்க பெறுகை வழிகாட்டு நெறிகள் 7.9.5 ஆம் பந்தியின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட ஏனைய நியதிகளும் நிபந்தனைகளும் தொடர்ந்தும் மாறாதிருக்கும்.

03. திருத்தப்பட்ட முன்னுரிமையானது இச்சுற்றறிக்கை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஆரம்பமாகும் கேள்வி மனுக்களுக்கு ஏற்புடையதாகும்.

பீ.பி. ஜயசுந்தர
திறைசேரிச் செயலாளர்